**O.S.261/2015**

Date: **26.06.2025**

Dw–1 – இசக்கி, த/பெ.சுப்பையா

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்:–**

1. நிரூபண வாக்குமூலத்திலோ அல்லது எதிர்வழக்குரையிலோ வீட்டை இந்த வருடத்தில் கட்டியுள்ளேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். பிவாசாஆ–11 ஆவணம் 2014ம் வருடம் மே மாதம் 15ம் தேதி கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். பிராதை படித்துபார்த்துதான் பதில் தாக்கல் செய்தேன். பிராதில் 2014, மே மாதம் வாதி ஊரில் இல்லாத சமயத்தில் பிரதிவாதி ஆக்கிரமித்து கட்டுமானம் கட்டியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அது தவறு. நான் 2014ல் வீட்டை இடித்து புதிதாக கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல, 2005ம் வருடம்தான் கட்டினேன். பிவாசாஆ–11 ஆவணத்தில் கீழ்தளத்தை பொறுத்துதான் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வரைபடத்தின் அடிப்படையில்தான் 2014ம் வருடம் வீடு கட்டுவதற்கு அனுமதி கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான்.

2. 2014ம் வருடம் பழைய வீட்டை இடித்து கட்டும் போது கூடுதலாக ஆக்கிரமித்து வீடு கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. பிவாசாஆ–10 வரைபடத்தில் உள்ள வீட்டை இடித்து புதிதாக கட்டுவதற்காகத்தான் பிவாசாஆ–11 பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் ஆக்கிரமித்து கட்டுமானம் கட்டியுள்ளேன் என்றும், அதனை இடித்து அப்புறப்படுத்தி கொடுக்க நான் கடமைப்பட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் ஸ்தலத்தை பார்வையிட்டு அளந்து நான் கூடுதலாக கட்டியுள்ளேன் என்று அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், அதற்கு முரண்பாடாக சாட்சியம்

**அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாதியின் வழக்கு அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல.**

**<u>மறுவிசாரணை</u>**

**இல்லை**

Sd/–இசக்கி

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பித்து சாட்சி ஒப்புக்கொண்டு கையெழுத்திட்ட பின்பு என்னால் சான்றொப்பம் இடப்பட்டது.

P PRAVEEN JEEVA

Digitally signed by P PRAVEEN JEEVA
Date: 2025.06.26 16:34:40 +0530

மு.மா.உ.நீ
அம்பாசமுத்திரம்.